ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1864/33 - 2014 මැයි මස 27වැනි අඟහරුවාදා - 2014.05.27

1864/33 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியின் ஆட்சியுரிமையை எடுத்துக் கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவில் முன்னேஸ்வரம் பற்றுவில் முன்னேஸ்வரம் கிராமத்தில் அமைந்துள்ள புத்தளம் நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்டு அவர் பொறுப்பிலுள்ள ஆ.வ.பு 4952 ஆம் இலக்கம் கொண்ட வரைபடத்தில் துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ள 0.0031 ஹெக்ரயர் விஸ்தீரணமுடைய இருந்த தோட்டம் எனும் காணியின் ஆட்சியுரிமை எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2014 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு சிலாபம் பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தல் வேண்டும்.

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2014 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

யூ.எஸ்.என்.பர்னாந்து ,
பிரதேச செயலாளர்,
சிலாபம்.

பிரதேச செயலகம்,
சிலாபம்,
2014, மே 26.

6 - 271

---

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணயிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம்460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவில் முன்னேஸ்வரம் பற்றுவில் முன்னேஸ்வரம் கிராமத்தில் அமைந்துள்ள புத்தளம் நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்டு அவர் பொறுப்பிலுள்ள ஆ.வ.பு 4961 ஆம் இலக்கம் கொண்ட வரைபடத்தில் விகாரைவத்தை எனப்படுகின்ற புஸ்பாராம காணி எனும் காணியின் துண்டு இலக்கம் 01,

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

வடக்கு: பு2795 ஆம் ஆரம்ப வரைபடத்தில் காணித் துண்டு இலக்கம் 08; கிழக்கு: பு2795 ஆம் ஆரம்ப வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 08 மற்றும் பிரதேச சபை வீதி; தெற்கு:பிரதேச சபை வீதி மற்றும் பு 2795 ஆம் ஆரம்ப வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 08; மேற்கு: பு 2795 ஆம் ஆரம்ப வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம்08. ஆகிய எல்லைகளைக் கொண்டதும் 0.0127 ஹெக்ரயார் விஸ்தீரணமுடையது.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2014 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு சிலாபம் பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தல் வேண்டும்.

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2014 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

யு.எஸ்.என்.பர்னாந்து ,
பிரதேச செயலாளர்,
சிலாபம்.

பிரதேச செயலகம்,
சிலாபம்,
2014, மே 26.
6 - 272